<u>தலைமை குற்றவியல்  நடுவர் நீதிமன்றம்,</u>
<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>

MCOP No:73/2023 நாள் 04.06.2025.

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய எம.சா.3 ன் வாக்குமூலம். 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டம் 4வது பிரிவின் படி திரு.சேவகபாண்டியன், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வைரமுத்து | -- | |
| த-பெ | சந்திரசேகரன் | சமயம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | |

முதல் விசாரணை

நான் திருநெல்வேலி ஒரியண்டல் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணியாற்றி வருகிறேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

விபத்து வாகனமான TN72 AW 2840 என்ற பதிவெண் கொண்ட டிராக்டருக்கான எங்கள் நிறுவனத்தின் காப்பீட்டு சான்றிதழ் எமசாஆ 9 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

மனுதாரர் எங்கள் நிறுவனத்தை பொறுத்தவரை 3ம் தரப்பினர் ஆவார். மசாஆ 4 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் டிரைலர் ஆய்வுக்கு கொண்டு வந்ததாக குறிப்பிடவில்லை. விபத்தின்போது டிராக்டரோடு டிரைலர் இணைக்கப்பட்டிருந்தது என்ற முதல்தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தில் டிரைலர் சம்பந்தப்படவேயில்லை என்றும் மனுதாரருக்கு இழப்பீடு வழங்குவததை தவிர்ப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்குள்ளான டிராக்டரை மாடுகளை ஏற்றிக்கொண்டு விற்பதற்காக வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டதாக நான் கூறுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. டிராக்டர் இலகுரக வாகனம் என்பதால் அதற்கு வில்லை தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரரோடு சேர்ந்து எங்கள் நிறுவனமும் இழப்பீடு வழங்க

கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. காப்பீட்டு சான்றிதழில் எந்த விதிமீறலும் இல்லை என்பதால் மனுதாரருக்கு இழப்பீடு வழங்கவதை மறுக்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of June 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**